மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காங்கயம்

<u>அசல் வழக்கு எண்.205/2022</u>

2026ம் ஆண்டு பிப்ரவரி 24ம் நாள் செவ்வாய்க்கிழமை வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு சட்டத்தின் ஏற்பாட்டின்படி திருமதி.கே.எஸ்.மாலதி, பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பாலசுப்பிரமணி | தொழில் | |
| த/பெ | | ஊர் | |
| வயது | | தாலுாக்கா | காங்கேயம் |
| மதம் | இந்து | மாவட்டம் | திருப்பூர் |

<u>24.02.2026 வா.சா.1 ஆஜர் சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டு 1, 2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. தாவா சொத்தானது நால்ரோடு கிராமம் காலை எண். 885, 886 மற்றும் 887 ஆகிய காலைகளில் அமைந்துள்ளது. மேற்படி பூமியில் எனக்கு பாத்தியப்பட்டது என்பதை பொறுத்து நான் வருவாய்த்துறை ஆவணங்கள் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்தை பொறுத்து புல வரைபடம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் என் வசம் உள்ளது. தேவைப்படும் பட்சத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன்.

2. ரீ.ச.எண்.883/A5 பூமியானது 2ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட பூமி என்றால் சரிதான். வழக்குரை சொத்து விபரத்தில் தாவா சொத்துக்களின் நான்கு புற செக்குபந்திகளை குறித்து நான் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். பிரதிவாதிகள் பூமியின் தென்புறத்தில் மேற்படியார்கள் கிழமேலாக கம்பிவேலி போட்டு

இருந்தார்கள் என்றால் இல்லை. பிரதிவாதிகள் மேற்படியார்களின் பூமியில் கிழபுறத்தில் தென்வடலாக பாதி அளவிற்கு கம்பிவேலியும் மீதி இடங்களுக்கு கிழுவன் வேலியும் அமைத்திருந்தார்கள் என்றால் இல்லை.

3. பிரதிவாதிகள் பூமியில் தென்புறமும் கிழபுறமும் அமைக்கப்பட்டுள்ள கம்பி வேலியை நானும், 2, 3 வாதிகளும் பூங்கொடி ஆகியோர்கள் சேதப்படுத்தியதாக எங்கள் மீது காங்கயம் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டு அதன் அடிப்படையில் குற்ற எண். 471/2022 ஆக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் பொய் புகாரின் அடிப்படையில் அந்த முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி புகாரின் அடிப்படையில் என் மீது காங்கேயம் காவல் துறையினரால் மேற்படி வழக்கில் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் அதுவும் பொய்யாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

(ஆவணங்கள் பார்வையிட வேண்டுமென்ற 1, 2 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின் பேரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது)

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் சரிபார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கைரேகை செய்தும்/கையொப்பம் செய்தும் ஒப்புக்கொள்ளப்படுகிறது.

K S MALATHI

Digitally signed by K S MALATHI
Date: 2026.02.24 19:01:48 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம்